**மினுவாங்கொட பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினுவாங்கொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மினுவாங்கொட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2(ஆ),( இ), (ஈ), (உ), 1.2.3, 1.2.4, 1.2.5(அ) (i) மற்றும (ஆ)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் குறித்துரைத்த மாதிரிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் முன்னைய | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதிகளின் தவறுகள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 671,475,941 மற்றும் மூலதனத்திற்கான நிதி உதவிகளின் பங்களிப்பு கணக்கு மீதி ரூபா 45,954,605 உரிமை மூலதனமாக இருப்பு மற்றும் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | நியமங்களின் பிரகாரம் கணக்குகளை தயாரிப்பதற்குரிய உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 22 ஆந் திகதிய LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | புதிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனியாக வேறுபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவின மானிய பெறுவனவுகளில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலுத்துதல்கள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக கழித்து சேமிப்பு தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தின் கீழான மிகையில் இனங்காணப்படாமல் மானியமாக பதியப்படல் வேண்டும். எனினும் கிடைத்த வெளிவாரி மூலதன செலவின மானியம் ரூபா 131,784,289 ஆக இருந்த போதிலும் சபை நிதியத்திலும் உள்ளடக்கப்பட்ட மொத்த மூலதன செலவினம் ரூபா 250,485,961 பெறுவனவாக காண்பித்து சேமிப்பு காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களின் கீழ் குறிப்பு இலக்கம் 4 இல் சம்பள மீளளிப்பு ரூபா 61,542,000 காண்பிப்பதற்கு பதிலாக பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 2020 சனவரி 01 இல் உள்ளவாறான உரிமை மீதியான ரூபா 45,954,605 தொகை நன்கொடைகளின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மிகை ரூபா 15,587,395 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறினால் சம்பள மீளளிப்பு ரூபா 61,542,000 காண்பிப்பதற்கு பதிலாக 2020 சனவரி 01 இல் உள்ளவாறு உரித்து மீதியான ரூபா 45,954,605 தொகை நன்கொடைளின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | குறிப்பு இலக்கம் 08 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 121,330,668 தொகையான மொத்த செலவினம், மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தின் மாற்றல்களாக குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் மிகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பு இலக்கம் 08 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 121,330,668 தொகையான மொத்த செலவினம் தவறினால் குறிப்பு இலக்கம் 05 இன் கீழும் பதியப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து வருமானமாக காண்பிக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 6 மற்றும் மாற்றல் கொடுக்கல் வாங்கல்களான வருமானமாக காண்பிக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 7 என்ற இரண்டு குறிப்புக்களிலும் நிலையான வைப்பு வட்டி மற்றும் விற்பனை வருமானமாக ரூபா 5,232,570 | குறிப்பு இலக்கம் 06 மற்றும் 07 இல் இரு தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி இலக்கம் 07 இன் கீழ் தனியாக விற்பனை வருமானத்தில் மாத்திரம் பதியப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதி இரட்டைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டமையால் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மூலதன செலவினத்திற்கான மாகாண சபை மானியம் ரூபா 131,789,289 தொகை குறிப்பு இலக்கம் 10 இல் காண்பிப்பதற்கு பதிலாக குறிப்பு இலக்கம் 06 இல் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலான வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | புதிய மாதிரிப் படிவங்களில் மூலதன வருமானமாக மாகாண சபை மானியம் ரூபா 131,784,289 தொகை குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (உ) | விரிவான வருமான கூற்றில் குறிப்பு 4, 5, 6 மற்றும் 7 என்பவற்றில் மொத்த கூட்டுத்தொகையான ரூபா 575,624,676 இரு தடவை சேர்க்கப்பட்டமையால் மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் புதிய கணக்கு மாதிரிபடிவங்களில் பெறுமதி உள்ளடக்கும் போது கவனத்தில் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஊ) | விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 09 இன் மூலம் ரூபா 17,666,031 தொகை நிதிக் கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 15,734,593 தொகையான கொடுப்பனவுகள் அதில் உள்ளடக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் செலவினம் அதிகரித்தும் மிகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறு சரிசெய்து சமர்ப்பிக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (எ) | முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் ரூபா 15,734,593 தொகை நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் ரூபா 15,734,593 பெறுமதி புதிய மாதிரி படிவங்களில் பெறுமதி உள்ளடக்கும் போது தவறு ஏற்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | நடைமுறையல்லா முதலீடுகளின் பெறுமதி ரூபா 211,539,943 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் நிலையான வைப்பு முதலீடுகளின் வட்டி, முகப் பெறுமதியில் சேர்க்கப்பட்ட முறைமையினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உழைக்கப்பட்ட வட்டி ரூபா 4,192,209 இனால் முதலீடு குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணிப்பீடு செய்து எதிர்காலத்தில் சரிசெய்து சமர்ப்பிக்கப்படுமென அறியத் தருகின்றோம். | - மேற்படி - |
| (ஐ) | கடன்பட்டோர் ரூபா 45,100,303 தொகை சொத்தாக கணக்கீடு செய்தல் கைவிடப்பட்டிருந்தது. | குறிப்பு இலக்கம் 12 இன் கீழ் கடன்பட்டோர் ரூபா 46,621,024 ஆக இருக்க வேண்டும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஒ) | குறுங்கால செலுத்த வேண்டிய 06 கணக்குகளுக்குரிய ரூபா 3,405,804 மீதி பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்தல் கைவிடப்பட்டிருந்தது. | தவறினால் புதிய நியமங்களில் தயாரிக்கப்பட்ட மாதிரிப் படிவங்களில் உள்ளடக்கப் படாதிருந்தது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஓ) | வேலைகளுக்காக 2020 இல் கடன்கொடுத்தோர் ரூபா 68,343,327 சொத்துக்கள் அல்லது நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த வேலைகளுக்காக 2020 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்டமையால் 2020 ஆம் ஆண்டின் செலவினமாக எடுத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஔ) | இணக்கம் செய்யும் போது உப அலுவலகக் கணக்குகளிலிருந்து பிரதான அலுவலகக் கணக்கிற்கு மாற்றப்படாத பணமாக ரூபா 18,394 வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதியில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மினுவாங்கொட உப அலுவலகத்தில் இணையவழி ஊடாக (Online) பிரதான அலுவலகத்தின் கணக்கிற்கு செலுத்தப்பட்ட ரூபா 3,389 வங்கி மீதியில் உள்ளடக்கப்பட்டமையால் காசேட்டின் மீதியை பெற்றுக் | 2021 ஆம் ஆண்டின் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

கொள்வதற்காக குறைக்கப்பட வேண்டிய போதிலும் அது சேர்க்கப்பட்டமை மூலம் காசு மீதி இரண்டு மடங்கினால் அதாவது ரூபா 6,778 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 233,167,499 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 82,974,773 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,893,536 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 1,012,252,654 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட விஞ்சிய வருமானம் ரூபா 160,213,391 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 பெறுகைகள் முகாமைத்துவம்

### 3.1.1 பொருட்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 78 கூட்டுப்பசளை பாத்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 03 கூறுவிலைகள் கிடைத்து அதில் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்வதற்கு பெறுகைக்குழு 2020 யூலை 15 ஆந் திகதி பரிந்துரை செய்து குறைந்த விலை அலகொன்று ரூபா 4,750 ஆக காணப்படும் போது கூறுவிலை சமர்ப்பிக்காத வேறொரு தனியார் நிறுவனத்திலிருந்து அலகொன்று ரூபா 5,106 வீதம் ரூபா 398,268 தொகை செலுத்தி 2020 திசெம்பர் 21 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இதற்கு முன் பெறப்பட்ட நிறுவனத்தில் அந்த பாத்திரத்தின் நியமம் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை செய்த நிறுவனத்தின் மாதிரியினை விட நியமத்தில் உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்த அந்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யவதற்கு தீர்மானிக்கப்பட்டது என அறியத்தருகின்றோம். | பெறுகைக் குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். |